
## திராவிடத்தால் வாழ்கிறோம்

899

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## மாநாடு

ர.பிரகாசு

72

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# சுயமரியாதை மாநாட்டில் அம்பேத்கர்!

*தமிழ்நாட்டுக்கு வெளியே நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகளில் மிக முக்கியமான மாநாடு, பம்பாயில் நடைபெற்ற ‘மகாராஷ்டிர முதல் சுயமரியாதை மாநாடு’. 1929-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி, நாசிக் சமூக சமத்துவ சங்கத்தின் ஆதரவுடன் இம்மாநாடு நடைபெற்றது. பம்பாயில் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது என்பதே சிறப்புக்குரியதுதான். ஆனால், அதைவிட குறிப்பிடத்தக்க மாபெரும் சிறப்பு, இம்மாநாட்டில் தலைமைப் பேருரையை நிகழ்த்தியவர் புரட்சியாளர் அம்பேத்கர்.*

*‘நாசிக் கலாசாலை’ ஆசிரியராக இருந்த சாப்னிஸ், ‘சமத்துவம்’ பத்திரிகை ஆசிரியர் டி.வி.நாயக், எம்.பி.தேசமுகி உட்பட பம்பாயின் முக்கிய பிரமுகர்கள் பலர் மாநாட்டிற்கு வருகை வந்திருந்தனர். பொதுமக்கள் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். புரட்சியாளர் அம்பேத்கருக்கு ரயில் நிலையத்தில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டு, மாநாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். நண்பகல் 1.30 மணிக்கு மாநாடு தொடங்கியது.*

*மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ராக்கேட் என்பவர், உடல்நலம் சரியின்மை காரணமாக, வரவேற்புரையை வாசிக்கவில்லை. தலைமை உரையாற்றிய அம்பேத்கர், ‘நாட்டில் தாழ்த்தப்பட்டோர் நிலைமை என்னவாக இருக்கிறது’ என்பதை எடுத்துக்கூறினார். “இந்து மதத்தில் நிலவும் உயர்வு- தாழ்வு பேதங்கள் சுயமரியாதையை அழித்துவிட்டன. ஒடுக்கப்பட்ட- பிற்படுத்தப்பட்ட மக்கள்தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்க நகைகள் அணிவதற்குகூட ஜாதி பேதம் பார்க்கப்படுகிறது. சில வகுப்பார் தங்க நகைகளை அணியக்கூடாது, தாழ்ந்த உலோகத்தால் செய்யப்பட்ட நகைகளைத்தான் அணிய வேண்டும் என்கிறார்கள். பணம் இருந்தால்கூட தாழ்த்தப்பட்டவர்கள் தங்க நகை அணியக்கூடாதாம்! இந்த தீய வழக்கத்தை மீறி, தங்க நகை அணிந்த தாழ்த்தப்பட்டோருக்கு பலவித கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன” என்று அம்பேத்கர் கூறியது அந்த காலகட்ட சாதியப் பாகுபாடுகளை கண்முன் நிறுத்துகிறது.*

*மேலும், “தாழ்த்தப்பட்டோரின் சிறுமை நிலையை மாற்ற வேண்டுமானால், அவர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச் செய்ய வேண்டும். தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்காகத் துணிந்து நீங்கள் முயல வேண்டும் என்று அவர்களைத் தூண்டி விட வேண்டும். படிப்பினால் மாத்திரம் சமத்துவம் ஏற்பட்டுவிடும் என்று கருதுவது பைத்தியக்காரத்தனமாகும். படிப்பினால் ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் பெரிதும் நீங்கும். ஆனால், சமூக வாழ்க்கையில் அவர்கள் நிலைமை உயர்வடைய கல்வி மாத்திரம் போதாது. நான் உயர்ந்த கல்வி கற்றிருக்கிறேன். அப்படியிருந்தும், தீண்டத்தகாதவனாகவே கருதப்படுகிறேன். ஜாதி பேதம் என்ற கொடிய வருணாசிரமக் கோட்பாட்டை அடியோடு ஒழித்தால்தான் நாம் மேன்மையடைய முடியும்” என்று அம்பேத்கர் ஆற்றிய உரையின் சாராம்சத்தை ‘குடிஅரசு’ ஏட்டில் பதிவு செய்திருக்கிறார் பெரியார்.*

*அதன்பிறகு மாநாட்டில், பெரியாரைப் பாராட்டி அம்பேத்கர் அளித்திருந்த கடிதமும், எம்.கே.ரெட்டியார் அளித்திருந்த கடிதமும் மேடையில் வாசிக்கப்பட்டன.*

*குழந்தைத் திருமண முறை ஒழிக்கப்பட வேண்டும்.*

*ஜாதி- பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.*

*புரோகித முறை கூடாது.*

*மனுசாஸ்திரம், புராண நூல்களைப் பறிமுதல் செய்ய வேண்டும்.*

*கோயில் பூசைகள், உற்சவங்களுக்கு சர்க்கார் செய்யும் செலவுகளை நிறுத்த வேண்டும் ஆகிய தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.*

**...கூட்டம் திரளும்**

## ஆதாயம் தேடும் அரசியல்!

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பல் இந்தியாவில் தொழிற்சாலை அமைத்திருந்ததையும், அதை உள்துறை அமைச்சகம் கண்டு கொள்ளாமல் இருந்ததையும் பத்திரிகையாளர் அரவிந்தாக்சன் தரவுகளுடன் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இதுதொடர்பாக, தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியுள்ள அவர், “கடந்த மாதம் 08-06-2025 அன்று இந்தியாவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் (NCB) வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியின்படி, மெக்சிகோவின் மிக ஆபத்தான போதைப்பொருள் கடத்தல் கும்பல் Cartel Jalisco Nueva Generaci□n (CJNG) என்ற அமைப்பு நேரடியாக நிதியுதவி செய்து உ.பி மற்றும் டெல்லியில் போதை மருந்து தயாரிப்பு ஆய்வகம் தொடங்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளது.

25-10-24 அன்று நடத்திய சோதனையில் என்.சி.பி.யும், டெல்லி காவல்துறையும் இணைந்து அந்தக் கும்பலைக் கைதுசெய்து ஆய்வகத்தை முடக்கியுள்ளன. ஆனால், இதுவரை குற்றவாளிகளின் பெயரையோ புகைப்படத்தையோ என்.சி.பி. வெளியிடவில்லை. அந்த நிறுவனத்தை நடத்திய அமித்குமார் என்பவர் ஏற்கெனவே போதை மருந்து கடத்தல் வழக்கில் திகார் சிறையில் அடைக்கப்பட்டு 2018-ஆம் ஆண்டு நிபந்தனை ஜாமினில் வெளிவந்ததுடன், 06.08.2024 அன்றுதான் ரெகுலர் ஜாமின் கிடைத்துள்ளது. இடைக்கால ஜாமினில் வெளிவந்தவர், போதைப் பொருள் தயாரித்து இருப்பதை புலனாய்வு அமைப்புகள் எப்படி கவனிக்கத் தவறின?” என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களில் கைது செய்யப்படக்கூடிய நபர்கள் அரசியல் பிரமுகர்களாக இருந்தால், அதுவும் பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சியாக இருந்தால், அதை வைத்து ஆதாயம் தேடும் ஒன்றிய அரசு, நாட்டிற்கே மாபெரும் அச்சுறுத்தலாக உள்ள போதை மருந்து பறிமுதல் விவகாரத்தில் மெத்தனமாக செயல்பட்டு வருகிறது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சகத்தின் அரசியல் போக்குகளாலும் இந்தியாவிற்கே பேராபத்து காத்திருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### இதழியல் போற்றிய முத்தமிழறிஞர்!



தி.கூடலரசன்

2007-ஆம் ஆண்டுவாக்கில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்காட்டில் தங்கியிருந்தார். அங்கு வைத்து பேட்டி எடுக்கலாம் என காலை நேரத்தில் சென்றிருந்தேன். அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் நேரம் இல்லை என்றாலும், எதற்கும் தலைவரைக் கேட்டுப்பார்க்க அனுமதி அளித்தார். தலைவரிடம் சென்று பேட்டி என்றதும், “நேற்று அரசு விழாவில் பேசி விட்டேன். இப்போது செய்தி என்ன?” என்றவர், ‘சரி’ என்றார். சில கேள்விகளுக்குப் பின்னர், ‘நீண்ட காலம் கழித்து நீங்கள் ஏற்காடு வருகை தந்துள்ளதை எப்படி உணர்கிறீர்கள்?’ என்றேன். உடனே சிரித்தபடி “இது மந்திரிகுமாரி உலவிய மண்” என்றார் புன்னகையுடன். அப்போது செய்தியாளர்கள் சார்பில் முதல்வருக்கு சிறப்பு செய்யும் வாய்ப்பில் தலைவருக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தேன்.

**–தி.கூடலரசன், பத்திரிகையாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

72

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கோயில் கூடாது என்பதல்ல!

*2021-ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலையத்துறை மீதான திட்டமிட்ட அவதூறுகளும் தாக்குதல்களும் பல்வேறு தரப்பினரிடமிருந்து வெளிப்பட்ட வண்ணம் இருக்கின்றன. கோயில்களில் இருந்து அரசு வெளியேறவேண்டும் என்ற பிரச்சாரம் காவிக்கூட்டத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதை அப்படியே வழிமொழிந்தார் அண்ணாவையும், திராவிடத்தையும் பெயரில் கொண்டிருக்கும் கட்சியின் பொதுச்செயலாளர்.*

*அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்- பெண் ஓதுவார்- தமிழில் அர்ச்சனை- 3000-க்கும் அதிகமான குடமுழுக்கு விழாக்கள், புதிய அச்சகத்தின் வழியாக நூல்கள் வெளியீடு, அன்னதான நற்பணிகள், கல்வித்தொண்டு என பல்வேறு சீர்திருத்த பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருவது ஆதிக்கவாதிகள் கண்களை உறுத்திக்கொண்டேயிருக்கிறது.*

*நீதிக்கட்சி காலத்தில் பனகல் அரசர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை வருவதற்கு முன்னர், கோயில்களின் நிலைமை எப்படி இருத்தது என்பதை அறிந்துகொண்டால், இந்தத் துறையின் அவசியம் நமக்கெல்லாம் விளங்கும்.*




*மெட்ராஸ் மாகாண அறநிலையத்துறை ஆணையாளராகப் பணியாற்றி வரலாறு, இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புற இலக்கியம், கோயிற்கலை, சமயம், மானிடவியல் எனப் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர் தமிழறிஞர் கோவைகிழார். அவர் எழுதிய ‘கோயில் பூனைகள்’ என்ற நூல் 20-ஆம் நூற்றாண்டில் கோயில்களில் நடைபெற்ற சொத்து மோசடி, சிலை திருட்டு, முறைகேடுகள், குற்றச்செயல்கள் ஆகியவற்றைக் கொண்ட சம்பவங்களின் தொகுப்பாக வெளியாகி இருக்கிறது.*

*பேரூர்ப் புலவர் பேரவை சார்பாக 1995-ஆம் ஆண்டு மே மாதம் வெளியான இந்நூலின் முதற்பதிப்பு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் 2010-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத்தமிழ் செம்மொழி மாநாடு சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.*

*கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதில் நடக்கும் மோசடிகள், கோயிலுக்குப் புது நகையைக் காணிக்கையாகச் செலுத்த வைத்து அதை எப்படி ஏமாற்றுவார்கள், யானைக்கு எந்த நாமம் போடுவது என்பதில் வடகலை- தென்கலை பிரிவினர்களுக்குள் நடந்த நீதிமன்ற வழக்கு, கோயில் வருவாயை லாவகமாக சுரண்டும் நபர்கள், கோயில் தர்மகர்த்தா பதவிக்காக நடக்கும் போட்டிகள், கோயில் பணத்திற்காக நடந்த கொலைகள் எனப் பல்வேறு முறைகேடுகளை எல்லாம் இந்நூலில் பதிவு செய்திருக்கிறார் கோவைகிழார்.*

*கோயில்களில் நடைபெறும் குற்றங்கள் அனைத்தும் கேலியும் கிண்டலுமாக எழுதப்பட்டிருக்கும் இந்நூல் முழுக்க உண்மைகளும் பஞ்சமில்லாமல் இடம்பெற்றுள்ளன, மக்கள் அதிகம் திரளும் கோயில் போன்ற தளங்கள் ஒரு தரப்பாருக்கு சாய்வாக ஒழுங்கற்று இருந்த நிலையைச் சீர்திருத்தியதில் அறநிலையத் துறையின் பங்கு மிகுதியாகவே இருக்கிறது என்ற உணர்வையே இந்நூல் நமக்கு ஏற்படுத்துகிறது.*

*“கோயில் கூடாது என்பதல்ல. அது கொடியவர்களின் கூடாரமாகிவிடக்கூடாது” என்ற ‘பராசக்தி’ வசனமும் காட்சியுமே போதும் கோயில்கள் ஏன் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதற்கு. இந்நூல் மேலதிக நியாயங்களையும் நியதிகளையும் வழங்குகிறது.*

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### கரிகாலன் பதில்கள்!

1976-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை காலத்தில் கழகத்தின் மீதான அவதூறுகளுக்கு ‘முரசொலி’ யில் பதிலளிக்க, கலைஞர் பெயரால் எழுத அனுமதி கிடைக்கவில்லை. தணிக்கை கெடுபிடி கடுமையாக இருந்தது. அதன் பிறகுதான் ‘கரிகாலன் பதில்கள்’ என்ற புதிய பகுதியைத் தொடங்கினார். அதிலும் கூட 20 கேள்விகளுக்குப் பதில் எழுதி இருந்தால், ஐந்து ஆறு கேள்விகள்தான் தணிக்கை அதிகாரிகள் அனுமதிப்பர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131